நாள்: 05.08.2025
O.S. No. 4/2023
பெயர்: மெகரஜ்கனி க/பெ. செய்யது இஸ்மாயில்
வா.சா.1

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறான தீர்ப்பு பெற்றுள்ளதை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் 800 சதுர மீட்டர். தாவா சொத்து காலி மனையா அல்லது வீடு கட்டப்பட்டுள்ளதா என்றால் வீடு கட்டப்பட்டுள்ளது. தாவா சொத்தை எதன் அடிப்படையில் அனுபவித்து வருகிறேன் என்றால் எனது அப்பா வீடு என்பதால் அனுபவித்து வருகிறோம். எனது அப்பா தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்றால் 2005 ல் இறந்தார். எனது தகப்பனார் ஏதேனும் உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். எனது தந்தைக்கு எவ்வாறு சொத்தில் உரிமை ஏற்பட்டதென்றபதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. எனது அண்ணனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். அண்ணன் பெயர் என்னவென்றால் ஜிம்மாகான். அவருக்கு முன் நான் ஏன் முதலில் சாட்சியமளிக்கிறேன் என்றால் என் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்வதால் சாட்சியமளிக்கிறேன்.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது :-</u>**

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.18 13:49:34 +0530